# ₹2000 மதிப்பு பாங்க்நோட்கள்– சர்க்குலேஷனில் இருந்து விடுவிக்கப்பட்டது – மறுபார்வை

1. இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) மே 19, 2023 தேதியிட்ட 2023-2024/257 செய்திக்குறிப்பு வெளியீட்டின்படி 2000 ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் இருந்து திருப்பிப் பெறுவதாக அறிவித்தது. இந்தப் பணியை காலக்கெடுவிற்குள் முடிக்கவும், பொதுமக்களுக்கு போதுமான காலத்தை வழங்கவும், செப்டம்பர் 30, 2023 வரை 2000 ரூபாய் நோட்டுகளை டெபாசிட் செய்யவும்/அல்லது மாற்றவும் வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டன. இந்த எக்ஸ்சேஞ்ச் வசதி, ரிசர்வ் வங்கியின் வெளியீட்டுத் துறைகளைக் கொண்ட 19 பிராந்திய அலுவலகங்களிலும் (ஆர்ஓக்கள்) கிடைக்குமாறும் செய்யப்பபட்டது. ரிசர்வ் வங்கி, மாதாந்திர செய்திக்குறிப்புகள் மூலம் பணத்தை திருப்பிப் பெறுதல் நடவடிக்கையின்நிலை குறித்து பொதுமக்களுக்குத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது.

2. வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி, மே 19, 2023 அன்று புழக்கத்தில் இருந்த ரூ.3.56 லட்சம் கோடி என மொத்த மதிப்புள்ள 2000 ரூபாய் நோட்டுகளில், 3.42 லட்சம் கோடி திருப்பிப் பெறப்பட்டுள்ளது, செப்டம்பர் 29, 2023 அன்றைய வணிகம் முடியும் போது 0.14 லட்சம் கோடி மட்டுமே புழக்கத்தில் இருந்தது. இதனால், மே 19, 2023 அன்று புழக்கத்தில் இருந்த ரூ.2000 ரூபாய் நோட்டுகளில் 96% திருப்பிப் பெறப்பட்டுள்ளன.

3. பணம் எடுக்கும் செயல்முறைக்கு குறிப்பிடப்பட்ட காலம் முடிவடைந்து விட்டதால், மறுபார்வையின் அடிப்படையில், ரூ.2000 பேங்க் நோட்டுக்களை டெபாசிட் செய்ய/மாற்றுவதற்கான தற்போதைய ஏற்பாட்டை அக்டோபர் 07, 2023 வரை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அக்டோபர் 08, 2023 முதல், ரூ.2000 நோட்டுகளை டெபாசிட் செய்ய/மாற்றுவதற்கான நடைமுறை பின்வருமாறு:

ஏ) வங்கிக் கிளைகளில் டெபாசிட் / எக்ஸ்சேஞ்ச் நிறுத்தப்படும்.

பி) 2000 ரூபாய் நோட்டுகளை தனிநபர்கள் / நிறுவனங்கள் 19 ஆர்பிஐ வெளியீட்டு அலுவலகங்களில் ஒரே நேரத்தில் ரூ.20,000/- என்ற வரம்பு வரை தொடர்ந்து மாற்றிக் கொள்ளலாம்.

சி) தனிநபர்கள்/நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள 19 ஆர்பிஐ வெளியீட்டு அலுவலகங்களில் எந்த தொகைக்கும் ரூ.2000 நோட்டுகளை கொடுத்து, இந்தியாவில் உள்ள அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கலாம்.

டி) நாட்டிற்குள் உள்ள தனிநபர்கள்/நிறுவனங்கள், இந்தியாவில் உள்ள அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்க, இந்தியா போஸ்ட் மூலம் 2000 ரூபாய் நோட்டுகளை 19 ஆர்பிஐ வெளியீட்டு அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பலாம்.

இ) அத்தகைய எக்ஸ்சேஞ்ச் அல்லது கடன் தொடர்புடைய ஆர்பிஐ/அரசு விதிமுறைகள், செல்லுபடியாகும் அடையாள ஆவணங்களை சமர்ப்பித்தல் மற்றும் ஆர்பிஐ-ஆல் தகுந்தது எனக் கருதப்படும் கவனமான செயல்முறைக்கு உட்பட்டது.

எஃப்) நீதிமன்றங்கள், சட்ட அமலாக்க ஏஜென்சிகள், அரசுத் துறைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள் அல்லது அமலாக்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வேறு எந்த பொது அதிகார அமைப்பும், தேவைப்படும்போது, 19 ஆர்பிஐ வெளியீட்டு அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றில் வரம்பு இல்லாமல் 2000 ரூபாய் நோட்டுகளை டெபாசிட் செய்யலாம்/எக்ஸ்சேஞ்ச் செய்து கொள்ளலாம்.

4. 2000 ரூபாய் நோட்டுகள் தொடர்ந்து சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும்.

5. 19 ஆர்பிஐ வெளியீட்டு அலுவலகங்களில் 2000 ரூபாய் நோட்டுகளை டெபாசிட் செய்ய/எக்ஸ்சேஞ்ச் செய்ய கிடைக்கும் மேற்கண்ட வசதி, மறு உத்தரவு வரும் வரை கிடைக்கும்.

6. பொதுமக்கள் இனியும் தாமதிக்காமல் ரூ.2000 ரூபாய் நோட்டுகளை டெபாசிட் செய்யும்படி / எக்ஸ்சேஞ்ச் செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7. இந்த விஷயத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (எஃப்ஏக்யூக்கள்) பற்றிய புதுப்பிக்கப்பட்ட ஆவணம் பொதுமக்களின் தகவல் மற்றும் வசதிக்காக ஆர்பிஐ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.